Registered as a Newspaper

யாழ் நகரில் வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்ற ஒரே ஸ்தாபனம்
பெட்டா எசன்ஸ் சப்பிளையர்ஸ்
333, நாவலர் ரோட், யாழ்ப்பாணம்.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை: ரூ. 1-25

வாடிக்கையாளர்களின் பராமரிப்பை முன்னிட்டு எமது ஸ்தாபனம் கீழ்வரும் முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளதை அறியத்தருகின்றோம்.
பெட்டா எசன்ஸ் சப்பிளையர்ஸ்
333, நாவலர் ரோட், யாழ்ப்பாணம்.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆனி மீ 26 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜுல்ஹஜ் பிறை 13 (10 — 07 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 193

## கள்ளிமடு படுகொலை இந்திய கவனத்திற்கு

சென்னை, ஜுலை 10

மட்டக்களப்பு கள்ளிமடு என்ற இடத்தில் நடந்த படுகொலைகள் பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணி இந்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தது.

இச்சம்பவத்தில் பெண்கள், குழந்தைகள் உட்பட 40 பேர் வரை சுட்டுக்கொல்லப்பட்டனர் என்றும் அவர்களின் சடலங்கள் பின்னர் எரிக்கப்பட்டன என்றும் கூட்டணி முறையிட்டுள்ளது.

கிழக்கிலங்கைத்தமிழர்களின் இன்னல்களை தீர்க்க உடனடி நடவடிக்கை எடுக்கும்படி இந்திய அரசை தமிழர் விடுதலைக் கூட்டணி கோரியிருக்கிறது. (இ—எ)

## மின்கம்பத் தண்டனை

யாழ்ப்பாணம், ஜுலை 10

ஆனைக்கோட்டைச் சந்தியில் வைத்து 45 வயதுடைய நபர் ஒருவருக்கு நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளினால் மரணதண்டனை விதிக்கப்பட்டது.

எஸ். நாகராசா அல்லது சைவதுரை என அழைக்கப்படும் இந் நபர் 11 வயதுடைய சிறுமி ஒருவரை கடந்த வாரம் அளவில் பலாத்காரப் படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு இத் தண்டனை வழங்கப்பட்டது. (இ-10)

## மண்டைதீவுப் பகுதியில் ஹெலி தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜுலை 10

மண்டைதீவுக் கடல் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்தோர் மீது நேற்று ஹெலிகொப்டரில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்டது.

எனினும் எவரும் காயமடையவில்லை.

நேற்றுக் காலை 7-45 மணி அளவில் இச்சம்பவம் நடந்தது.

ஹெலியில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்டபோது மீனவர்கள் சிலர் தமது படகுகளில் இருந்து கடலுக்குள் குதித்தனர். (இ-10)

## கொமாண்டோ கண்ணிவெடிக்கு பலி

யாழ்ப்பாணம், ஜுலை10

மட்டக்களப்பு போரதீவு பகுதியில் ரோந்து சென்ற பொலிஸ் கொமாண்டோக்கள் நிலக்கண்ணிவெடியில் சிக்கினர். இதனுல் ஒருவர் பலியானர்.

விசேஷ பொலிஸ் கொமாண்டோபிரயத்ன என்பவரே கொல்லப்பட்டவராவர்.

நேற்றுக் காலை இச்சம்பவம் நடைபெற்றது. (இ-10)

## சுபநேரம்

10-07-1987

வெள்ளிக்கிழமை

சுபநேரம்:- 5.58முதல் 7.28வரை

ராகுகாலம்:- 10.28முதல் 11.58வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும் பூரண விரதம்

### நெல்லியடியில் புலிகளினுல் தகர்க்கப்பட்ட

# முகாம் இடிபாடுகளிலிருந்து தமிழ் இளைஞர் மீட்கப்பட்டார்

வடமராட்சி, ஜுலை 10

நெல்லியடித் தாக்குதலுக்கு முன்னர் படையினரால் கைது செய்யப்பட்டு முகாமினுள் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர் ஒருவர் தாக்குதலுக்குப் பின் கட்டட இடிபாடுகளுக்கு மத்தியிலிருந்து விடுதலைப் புலிகளினுல் மீட்கப்பட்டார்.

உடுப்பிட்டி சமரபாகுவைச் சேர்ந்த சிவம் சிவராஜா (வயது 22) என்ற இளைஞரே இப்படி மீட்கப்பட்டவராவார்.

தமக்கு ஏற்பட்ட அனுபவத்தை அவர் உதயன் வடமராட்சி செய்தியாளருக்குத் தெரிவித்தார்.

கடந்த 6 ஆம் திகதி காலை 8 மணி அளவில் எமது பகுதியைச் சுற்றி வளைத்துத் தேடிய படையினர் அங்கு வைத்து என்னையும் எனது அயல் வீட்டைச் சேர்ந்த வேலுப்பிள்ளை ஜெயதேவன் (வயது 25), உடுப்பிட்டியைச் சேர்ந்த மற்ருெரு வாலிபரையும் கைது செய்தனர்.

பின்னர் நெல்லியடி முகாமுக்கு எம்மைக் கொண்டு சென்றனர்.

அங்கு எங்கள் மூவரினதும் கைகளைப் பின்புறமாகக் கட்டிய சிப்பாய்கள் எம்மைக் கடுமையாகத் தாக்கி சித்திரவதை செய்தனர்.

நாம் புலிகள் என்று ஒப்புக்கொள்ளுமாறு எம்மை வற்புறுத்தியே தாக்கினுர்கள்.

சிகரெட்டினுல் சுடச் சுட்டார்கள்.

நாம் மறுத்ததினுல் தொடர்ந்து தாக்கினுர்கள்.

எமது பதில் அவர்களுக்குத் திருப்தியளிக்காத காரணத்தினுல் எம்மை முகாமிலிருந்த மலசல கூடங்களினுள் அடைத்துப் பூட்டினுர்கள்.

நான் தனியாக ஒரு மலசலகூடத்தில் அடைபட்டிருந்தேன்.

அச்சத்தால் மனம் கலங்கிய நிலையில் நான் இருந்தபோது — இரவு 8.15 மணியளவில் திடீரென பயங்கர வெடிச் சத்தம் கேட்டது. தொடர்ந்து வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

நான் இறந்துவிட்ட (4 ஆம் பக்கம் பார்க்க)

### ★ வடமராட்சியில்

# போராளிகளின் நிலைகள் பலப்படுத்தப்படுகின்றன

காங்கேசன்துறை, ஜுலை 10

★ வடமராட்சியில் இராணுவ முகாம் அமைந்துள்ள பகுதிகளை விட ஏனைய பகுதிகளில் போராளிகள் தமது நிலையை வலுப்படுத்தி வருகிறுர்கள்.

★ அங்குள்ள 10 முகாம்களிலிருந்தும் தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்களும் ஹெலிக்கொப்டர் தாக்குதல்களும் தொடர்கின்றன.

★ அங்கிருந்து மக்கள் பீதியால் பெருமளவில் வெளியேறி வருகின்றனர்.

★ இராணுவ நடமாட்டம் வெகுவாகக் குறைந்து விட்டது.

★ இந்திய நிவாரண உதவியும் தடைப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பகுதியில் இருந்து அகதிகளாக வந்துள்ள மக்களைச் சந்தித்தபோது இவ் விவரங்கள் தெரியவந்தன.

வடமராட்சிப் பகுதியில் இருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் அகதிகளாக வெளியேறிக் கொண்டிருக்கிறுர்கள்.

வல்லைவெளி ஊடாக கால்நடையாக பெருமளவு மக்கள் கஷ்டப்பட்டு வந்து கொண்டி (4 ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய நிவாரணத்தால் அரசில் பெரும் பிளவு!



முச்சந்தி முரளி

அப்பிடியும் ஒரு பூகம்பம் வந்தால் தான் அரசியல் சுவாரசியமாய் இருக்கும்... இல்லையே...!

## அமைச்சர்கள் மட்டத்தில் இரண்டுபட்ட நிலை

கொழும்பு, ஜுலை 10

இந்திய அரசு யாழ்ப்பாண மக்களுக்கு நிவாரணப் பொருள்களை வழங்குவது தொடர்பாக, அரசாங்கத்தில் பெரும் பிளவு ஏற்பட்டுள்ளதாக அறியவந்துள்ளது.

அமைச்சர்கள் இவ்விடயத்தில் இரண்டுபட்டு நிற்பதாகவும், அரச எம். பிக்கள் அவற்றில் குழு சேர்ந்து வருவதாகவும் அரசியல் அவதானிகள் தகவல் தெரிவித்தனர்.

இந்திய நிவாரணக் கப்பல்கள் தொடர்ந்து வந்து கொண்டிருப்பது, அவை காங்கேசன் துறைக்கு வருவது ஆகிய இரண்டு விடயங்களிலும் அமைச்சர்கள், எம். பிக்கள் மத்தியில் பெரும் கருத்துவேறுபாடு நிலவுகிறது. பெரும் சர்ச்சைகளும் நடந்து வருகின்றன. இந்த வேறுபாடுகள் பெரும் பூகம்பமாக வெடிக்கலாம் — எனவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

"இந்திய நிவாரணப் பொருள்கள் கட்டுப்பாடு எதுவும் இன்றித் தொடர்ந்து வந்துகொண்டிருக்க அனுமதிக்கலாமா?

அதுவும் இந்தியக் கப்பல்கள் காங்கேசன் துறைமுகத்தில் நங்கூரம் இடுவதற்கு தொடர்ந்து ஸ்ரீலங்கா அரசு அனுமதிக்கலாமா?

இவைகுறித்து அமைச்சர்கள், எம். பி. க்கள் மட்டத்திலும் பெரும் சர்ச்சையும், பிளவும் தோன்றி உள்ளதாம்.

★ இந்திய நிவாரணப் பொருள்களை அளவு எல்லை, காலஎல்லை இன்றி யாழ்ப்பாணம் கொண்டு வர அனுமதிப்பது எமது அதிகாரத்தை இழப்பதாகும்.

★ இந்தியக் கப்பல்கள் வடக்கே வந்து செல்வது ஸ்ரீலங்காவின் பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தலாகும்.

இப்படி அமைச்சர்களில் ஒரு குழுவும், (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஜலண்ட் பிரைட் வெளியேநிற்கிறது

யாழ்ப்பாணம், ஜுலை10

காங்கேசன் துறை சடற் பிரதேசத்தில் தரித்து நிற்கும் ஜலண்ட் பிரைட் கப்பல் நேற்று துறைமுகத்துக்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

ஸ்ரீலங்கா கப்பல் ஒன்று துறைமுகத்தில் தரித்து நிற்பதன் காரணமாகவே இக்கப்பல் உள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை. (உ-10)

## இனுவிலில் இந்திய நிவாரணப்பொருள்

காங்கேசன்துறை, ஜுலை 10

இனுவில் பொது நூலகத்தினரால் பாலர்பாடசாலைக் கப்பட்டுவரும் 52 அகதிக் குடும்பங்களுக்கு இந்திய நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த திரு. சார்க் இதில் கலந்து கொண்டார்.

"கஷ்ட நிலையிலுள்ள மக்களுக்கு உதவுவதற்காகவே இந்த உதவிப் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

வேறு எந்த நோக்கமும் இல்லை" என அவர் அங்கு பேசும் போது கூறினார். (இ-எ)

## விமானம் மூலம் மேலதிக படையினர்

### பலாலியில் இறக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஜுலை 10

பலாலி இராணுவ முகாமில் நேற்று மேலதிக படையினர்விமானம் மூலம் இறக்கப்பட்டனர்.

இராணுவத் தளபாடங்கள் சிலவும் விமானம் மூலம் பலாலிக்கு கொண்டு வரப்பட்டன என்று தெரியவருகிறது.

காங்கேசன்துறைமுகத்தில் தற்பொழுது இந்தியக் கப்பல்கள் தரித்து நிற்பதன் காரணமாக இராணுவத்தினர் விமானம் மூலம் பலாலிக்குக் கொண்டு வரப்படுகின்றனர்.

பலாலிக்கு வந்த இராணுவத்தினர் பின்னர் ஹெலிக்கொப்டர்கள் மூலம் வடமராட்சிப் பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டனர். (இ-10)

## 42 பேர் பூஸாவுக்கு

திருகோணமலை ஆயுதப் படை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் 42 தமிழர் சென்றவாரம் பூஸா இராணுவ முகாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். (இ-எ-150)

## தீவிரவாதிகளிடமுள்ள 50 கலிபர் துப்பாக்கி

### குறித்து அரசு சார்பு பத்திரிகை

கொழும்பு, ஜுலை 10

தீவிரவாதிகளை ஆதரிப்பவர்கள் தீவிரவாதிகளுக்கு 50 கலிபர் துப்பாக்கிகளை வழங்கியிருக்கின்றனர்.

இதற்கான தெளிவான சாட்சியங்கள் இருக்கின்றன. இப்படி அரசசார்பு பத்திரிகை 'டெயிலி நியூஸ்' நேற்று செய்தி வெளியிட்டது.

இந்த 50 கலிபர் துப்பாக்கிகள் விமானங்களை சுடக்கூடிய சக்தி வாய்ந்தவை.

ஸ்ரீலங்கா விமானங்களுக்கு இவ் திறனுள்ள பாரதூரமான சேதங்கள் இன்னும் ஏற்படுத்தப்படவில்லை.

என்றாலும் தீவிரவாதிகள் 50கலிபர் துப்பாக்கிகளை வைத்திருக்கின்றனர் என்பது பாதுகாப்பு அதிகாரிகளுக்குத் தெரியும்.

இப்படி 'டெயிலிநியூஸ்' பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## வடமராட்சியில் பாகிஸ்தான் விமானங்கள்?

வடமராட்சி, ஜுலை 10

நேற்றுக் காலை 9 மணியளவில் வடமராட்சியின் சில பகுதிகள் மீதாக இரண்டு விமானங்கள் பறந்தன.

இவை பாகிஸ்தான் விமானங்களாக இருக்கலாம் எனவும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. (உ-160)

## மண்டானில் வீடுகள் பல தீக்கிரை!

வடமராட்சி, ஜுலை 10

மண்டான் முகாம் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அமைந்திருக்கும் வீடுகள் பல தீ வைத்து எரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அயற் கிராமங்களை நோக்கிப் படையினர் ஷெல் தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

வீடுகள் அடிக்கடி தீயிடப்படுவதால் அப்பகுதியிலிருந்து புகை கிளம்புவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதியில் உள்ள மக்களின் கால் நடைகளும் இறைச்சிக்காகப் படையினரால் அபகரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-160)

## கொழும்பிலும் முகமூடி தொல்லை

### 17 தமிழர் விசாரணையில்

கொழும்பு, ஜுலை 10

முகமூடி நபர்கள் கொழும்பிலும் தலையாட்டத் தொடங்கியுள்ளனர் கோட்டைப் பொலிஸ் பகுதியில் புதன்கிழமை அதிகாலை நான்கு தனியார் விடுதிகளைப் பொலிஸார் முற்றுகை இட்டனர்.

விடுதி வில் தங்கியிருந்தவர்கள் அனைவரும் முகமூடிநபர் முன்னர் நிறுத்தப்பட்டனர்.

முகமூடி தலையசைத்த 17 பேர் பின்னர் பொலிஸாரினுல் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அப்படி அழைத்துச் செல்லப்பட்டவர்கள் வடமராட்சி, வல்வெட்டித்துறைப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் வெளிநாடு செல்வதற்காகக் கொழும்பு வந்து இருந்தார்கள் என்றும் தெரியவந்தது. (இ-எ)

## பேச்சுக்களை ஆரம்பிக்க

### குடாநாட்டில் அமைதி வேண்டும்

### திவாரி கூறுகிறுர்

சென்னை, ஜுலை 9

யாழ்ப்பாணக் குடாவில் அமைதி நிலவ வேண்டும். பேச்சுக்களை மீண்டும் தொடங்குவதற்கு இது முன் தேவையாகும். பேச்சுக்களை மீண்டும் தொடருவதற்கு கொழும்புஅரசிடமிருந்து இந்தியா இன்னமும் பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

இந்திய வெளியுறவு அமைச்சர் நாராயண தத் திவாரி முன்கண்ட வாறு தெரிவித்தார்.

'இந்து'வுக்கு அளித்த பேட்டியில் அமைச்சர் இப்படித் தெரிவித்தார்.

அண்மையில் யாழ் குடா நாட்டில் மேற்கொள்ளப்பட்ட இராணுவத் தாக்குதல்கள் காரணமாக தமிழர்கள் தாங்கள் பிரித்து ஒதுக்கப்பட்டு வருவதாக கருதுகின்றனர்; சுயபுணர்ச்சியுடன் இருக்கின்றனர்.

இந்த மனத்தாங்கலைச் சாந்தப்படுத்தும் விதத்திலான நடவடிக்கைகளை கொழும்பு அரசு எடுக்கும் என்று நான் நம்புகின்றேன்.

எதிர்காலப் பேச்சுக்களில் தமிழர் சார்பில் யார் கலந்துகொள்வர் என்பதை முடிவு செய்வது தமிழர்களுக்குரிய விஷயமாகும்.

இப்படி அமைச்சர் திவாரி தெரிவித்தார். (இ-எ)



திவாரி

## ஹமீத் திரும்பினுர்

கொழும்பு, ஜுலை 10

அல்ஜியர்ஸ் சென்றிருந்த வெளிவிவகார அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீத் புதன்கிழமை கொழும்பு திரும்பினுர். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய...

வடமராட்சியிலிருந்து தொடர்ந்தும்

# ஆயிரக்கணக்கானோர் வெளியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

கடந்த ஞாயிறு இரவு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய இராணுவ முகாம் தகர்க்கப்பட்ட சம்பவத்தை அடுத்து ஆயிரக்கணக்கானோர் தினமும் வடமராட்சியிலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

நேற்றும் பெரும் எண்ணிக்கையில் இவர்கள் யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்தனர்,

பெரும்பாலானோர் கால்நடையாக கொடிகாமம் வந்து கொடிகாமத்திலிருந்து வாகனங்கள் மூலம் யாழ்ப்பாணம் வந்துகொண்டிருக்கின்றனர்.

அகப்பட்ட பொருள்களுடன் வெளியேறி வந்துள்ள இவர்கள் வடமராட்சியில் தொடர்ந்து இருக்கமுடியாது என்று தெரிவிக்கின்றனர்.

வரும் வழியில் பல இடங்களில்போராளிகள் நிலை கொண்டிருப்பதாகவும் அவர்களை முதலில் கண்டவுடன் சிப்பாய்கள் என்று கருதி அச்சம் அடைந்ததாகவும் தப்பிவந்த பெண் ஒருவர் தெரிவித்தார்.

வடமராட்சியில் நேற்றும் ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்பட்டது. (இ)

## வலி வடக்கில் மக்கள் வாழ முடியாத நிலை!

### சட்டத்தரணி குமரகுரு இந்து நாளிதழுக்குப் பேட்டி

சென்னை, ஜூலை 9

இராணுவ அடக்குமுறை காரணமாக வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் தமிழர் வாழவே முடியாத நிலை ஏற்பட்டு விட்டது.

வலிகாமம் பிரசைகள் குழுக்களின் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் சட்டத்தரணி அ. குமரகுரு 'இந்து' நாளிதழுக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த வாரம் திரு. குமரகுரு சென்னை வந்தார்.

காங்கேசன்துறை, கட்டுவன், தல்லிப்பளை பகுதிகள் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக முற்றாக அழிந்து போயின.

வலிகாமம் வடக்கில் ஐநூறுக்கும் அதிகமான வீடுகள் அழிந்துவிட்டன 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துவிட்டன.

சென்னைக்குப் புறப்படுவதற்கு ஒரு வாரத்துக்கு முன்னர் வலிகாமம் வடக்கு பிரசைகள் குழுக்கள் சம்மேளனத் தலைவர் பதவியை நான் இராஜினாமாச் செய்துவிட்டேன்.

தமிழர் விடுதலைக் கூட்டணியில் இன்னும் உறுப்பினராக இருக்கின்றேன். அதன் சட்டத்துறைச் செயலாளர் நானே.

மோட்டார் சைக்கிளில் செல்லும் எவரும் போராளியே என்று இராணுவம் நினைத்துச் செயல்படுகின்றது.

நான் ஒருமுறை மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தேன். அப்போது ஹெலிக்கொப்டரில் இராணுவம் என்னைத் துரத்தியது.

—இப்படி சட்டத்தரணி அ. குமரகுரு 'இந்து'வுக்குத் தெரிவித்தார். (உ-எ)


## வெற்றிடம்

கிளை முகாமையாளர் பதவிக்கான வெற்றிடங்களுக்கு தகுதிவாய்ந்த ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விபரங்களைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொ. சோமாஸ்கந்தன்
பொது முகாமையாளர்,
நல்லூர் பல நோ. கூ. சங்கம்,
திருநெல்வேலி



## உடுவில் மகளிர் கல்லூரி

Further Education Programme

G. C. E. 'O' Level பரீட்சையில் ஆங்கில மொழியுடன் சித்தியடைந்துள்ள மாணவர்கட்குரிய கற்கைநெறிகள்

JOB ORIENTED COURSES

- London Pitman Examinations
- ★ பரீட்சைகள் எமது நிலையத்திலேயே நடாத்தப்படும்.

London Pitman நிறுவன பரீட்சைக்குரிய கற்கைநெறிகள்:
- Short Hand
- Type - Writing
- Word - Processing
- Computer aided Typing
- N.C.E. (Pitman) English

குறிப்பு:- WORD PROCESSING: இக்கற்கை நெறிக்கு ஏற்கனவே Basic, Cobol நெறிகளில் சித்தியடைந்தோர் இந்நெறியையும் பூர்த்தி செய்து Diploma சான்றிதழைப் பெறமுடியும். Duration 2 to 4 Months.

★ மேலும், சுருக்கெழுத்து, தட்டெழுத்து ஆகிய நெறிகளைப் பூர்த்தி செய்தோர்/பயிற்சி பெறுவோரும் இக்கற்கைநெறியை பின்பற்றி உரிய பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

★ முழுக் கட்டணம் 1,500. தவணை முறைச் சலுகையுண்டு.

வகுப்புகள்:-
கிழமை நாட்கள்: புதன் வெள்ளி
வார முடிவு:- சனி, ஞாயிறு

விண்ணப்ப முடிவு திகதி: 15.7.87

● மேலும் விபரங்கட்கு தொடர்புகொள்க
(1267) —நிர்வாக அதிபர்


லலித் கூறும் யோசனை:

## வடக்கு, கிழக்கு இணைப்பு சாத்தியமா?

### ஆராய ஆணைக்குழு நியமிக்குக

கொழும்பு, ஜூலை 10

வடக்கு, கிழக்கு மாகாண சபைகளை இணைப்பது சாத்தியமா என்பதை ஆராய்வதற்கு ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும்—இப்படி ஒரு யோசனையை தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி அரசின் பரிசீலனைக்குச் சமர்ப்பித்துள்ளாராம்.

அமைச்சர் லலித், கடந்த செவ்வாய்க் கிழமை ஜனாதிபதி ஜெயவர்த்தனவைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

அப்போதே இந்த யோசனையைச் சமர்ப்பித்துப் பேசினார் என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய யோசனைகளைச் சமர்ப்பிக்கும்படி ஸ்ரீலங்கா அரசை, இந்தியப் பிரதமர் கேட்டுள்ளார் என்பது தெரிந்ததே.

அது சம்பந்தமாகவே ஜனாதிபதியை அமைச்சர் லலித் சந்தித்தார்.

அப்போது அமைச்சர் தெரிவித்ததாகக் கூறப்படும் வேறு சில யோசனைகளில் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

★ சிங்களம், உத்தியோக மொழி. அதில் மாற்றமில்லை.

தமிழ், இரண்டாவது உத்தியோகமொழி.

ஆங்கிலம், இணைப்பு மொழி.

★ பல்கலைக்கழக அனுமதி திறமையின் அடிப்படையில். ஆனால் பின்தங்கிய பகுதிகளுக்குச் சலுகை.

★ குடியேற்றம், தொழில் வாய்ப்பு சனத்தொகை விகிதாசாரத்தின்படி நடைபெறும். (உ-எ)

## ★ செய்திக்கொத்து ★

### ஆங்கில வகுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை10

நாட்டின் சூழ்நிலை காரணமாக சிறிதுகாலம் தடைப்பட்டிருந்த வார இறுதி ஆங்கில வகுப்புக்கள், இம்மாதம் 11 ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் மீண்டும் யாழ் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறும். (இ-69)

### நியமனம்

மானிபபாய், ஜூலை 10

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. யோசேப்மரியான் யாழ்ப்பாண மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளராக அண்மையில் நியமனம் பெற்றுர். (இ-90)

### அறவழி போராட்ட குழு உதவி

சாவகச்சேரி, ஜூலை 10

வடமராட்சியில்பாதிக்கப்பட்ட அறவழிப் பாலர்பாடசாலைமாணவ மாணவியரின் குடும்பங்களுக்கு அறவழிப் போராட்டக் குழுவினர் நிவாரண உதவிகளை வழங்கினர். எட்டுப் பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 250 குடும்பங்களுக்கு இந்த உதவிகள் கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கூடாக வழங்கப்பட்டன. (இ-31)

### அகதிப்பெண்ணைக் கார் மோதியது

சங்கானை, ஜூலை 10

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் தஞ்சம் அடைந்திருக்கும் அகதிகளில் ஒருவரான வீ. ஜெயராணி (வயது 17) என்ற இளம்பெண் தெருவைக் கடக்க முயன்றபோது வேகமாக வந்த கார் மோதியதும் வலதுகால் முறிந்தநிலையில் தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-ரி)

### கொக்குவிலில் உடுப்பிட்டி அகதிகள்

கொக்குவில், ஜூலை10

உடுப்பிட்டிப் பகுதியிலிருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் இடம்பெயர்ந்து கொக்குவில் பகுதியில் உறவினர்கள் வீட்டில் தங்கியுள்ளனர். (இ-69)

### மகாபாரதப் படிப்பு பூர்த்தியானது

கொக்குவில், ஜூலை 10

அரியாலை ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் ஆலயத்தில் ஐந்து மாதங்களாக தினமும் நடைபெற்றுவந்த மகாபாரதப்படிப்பு பூர்த்தி அடைந்தது. (இ-69)

### அன்பளிப்பு

வட்டுக்கோட்டை, ஜூலை, 10

யாழ்ப்பாணம் சர்வோதயம் இயக்கத்தினர் சங்கானை அகதிகள் புனர்வாழ்வு அமைப்பிற்கு 300 தேங்காய்களை அன்பளிப்புச் செய்துள்ளனர். (இ-161)

### குருத்துவ நிலைப்படுத்தல்

பண்டத்தரிப்பு, ஜூலை10

அருட் சகோதரர்கள் பி. ஜெயரட்ணம், ஆர். சூசைதாசன் ஆகிய இருவரும் இன்று 9 ஆம் திகதி குருத்துவ நிலைப்படுத்தப்படவுள்ளனர்.

இவர்களது குருத்துவ நிலைப்படுத்தல் வைபவம் யாழ். ஆசனக் கோவிலில் நடைபெறவுள்ளது. (இ-120)

### வரணிப்பகுதியில் நிவாரணம்

கொடிகாமம், ஜூலை 10

இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளும், சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. புண்ணியமூர்த்தி சுந்தரம்பிள்ளையும் வரணிப் பகுதியில் உள்ள அகதிகளுக்கு நிவாரணம் வழங்க நேரில் சென்று நடவடிக்கை மேற்கொண்டனர். (இ-75)

### இடமாற்றம்

வட்டுக்கோட்டை, ஜூலை 10

தொல்புரம் கிராம சேவையாளர் பிரிவில் கடந்த 9 வருடங்களாக கிராமசேவையாளராகக் கடமையாற்றிய திரு. முதர்மதாசன் சுழிபுரம் மேற்கு கிராமசேவையாளர் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பெற்றுள்ளார். (இ-161)

## நூல் வெளியீட்டு விழா தனித்துவமான மற்றொரு சிறப்பம்சம்

வட்டுக்கோட்டை, ஜூலை 10

இலக்கிய நேயர்கள், வாசக அபிமானிகள் என்போரின் ஒன்றுகூடலும் கருத்தரங்குமாகவே அமையும் தமிழ் விழாக்களில் இந்நூல் வெளியீட்டுவிழா தனித்துவமான மற்றொரு சிறப்பம்சத்தைக் கொண்டு பொலிவுறும்.

முதுமையிலும், நோயிலும் வாடிடும் நூலாசிரியர் புதுவாழ்வு ஒன்றில் நலம்பெற அன்னவர்க்கு இயன்ற ஆதரவும் நல்லாசியும்நல்கிடும் பெருமக்கள் இதய பேரவையாகவும் சிறப்பெய்தி நிற்பதே அது.

மறுமலர்ச்சி எழுத்தாளர் திரு. அ. செ. முருகானந்தனின் ''மனத மாடு'' சிறுகதைத் தொகுதி நான்காவது அறிமுகவிழாவில் நூலாசிரியர் அ. செ. முருகானந்தன் பதிலுரை வழங்கும்போது மேற்கண்டவாறு கூறினர்.

யாழ் மாவட்ட கலாசாரப் பேரவையின் ஆதரவில் அளவெட்டி மகாஜன சபை மண்டபத்தில் தெல்லிப்பழை உதவி அரச அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரம் தலைமையில் அண்மையில் இவ்விழா நடைபெற்றது

விழாவில் இன்னும் பலரும் சிறப்புரை வழங்கினர்கள். (இ-161)

### மக்கள் முகம்

இளைப்பாறினர்



பலாலி, ஜூலை 10

அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் மகா வித்தியாலய அதிபர் சங். சகோதரி எம். பிடெரினு இளைப்பாறினர்.

34 ஆண்டு காலம் ஆசிரியர் சேவையில் இருந்த இவர் திருமலை, மன்னார், மட்டக்களப்பு மாவட்டங்களிலும் கடமையாற்றியுள்ளார்.

இவரது காலத்தில் மகா வித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்ட அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் மகா வித்தியாலயம் சகல துறைகளிலும் குறிப்பிடத்தக்க உயர்வு பெற்றுள்ளது. (இ-119)

### வீடுகள் சேதம்

மட்டக்களப்பு, ஜூலை10

வாழைச்சேனை கிண்ணையடி கிராமத்தில் அண்மையில், இடம்பெற்ற அசம்பாவிதங்களின் போது 11 வீடுகள் ஆயுதப்படையினரால் சேதமாக்கப்பட்டுஉடைமைகளுடன் தீக்கிரையாக்கப்பட்டன. இதனால் பொது மக்களின் உடைமைகளுக்கும்ஏற்பட்டசேதங்களின் பெறுமதி சுமார் இரண்டரை இலட்சம் ரூபா என பிரசைகள் குழுவுக்குக்கிடைத்துள்ள புகார்கள்மூலம் தெரிய வந்துள்ளது. (இ-21)

# பருந்து அடித்த மறுநாள் மரக்கறிகளைச் சந்தைக்கு எடுத்துச் செல்லாதீர்கள்

## விவசாயப் போதனாசிரியர் அறிவுரை

மானிப்பாய், ஜூலை 10

முதல் நாள் மருந்து அடித்த தோட்டத்து மரக்கறிகளை மறுநாள் சந்தைக்கு எடுத்துச் செல்லவேண்டாம். இதனால் பொது மக்களுக்குப் பல நோய்கள் உண்டாவதுடன் உயிரிழப்புக்களும் நேரிடலாம்.

மருதனமடத்தில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய போதனாசிரியர் திரு. எஸ். கந்தசாமி பயிர்ச்செய்கையாளர்களை மேற்கண்டவாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலையத்தில் நடைபெற்ற விவசாயக் குழுவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கில் உரையாற்றிய போதே திரு. கந்தசாமி இந்த வேண்டுகோளை விடுத்தார்.

திரு. ம. முத்துத்தம்பி தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது.

வாழை, கத்தரி போன்ற பயிர்களுக்கு ஏற்படும் நோய்கள் பற்றியும், அவற்றுக்கு மருந்து தெளிக்கும் முறைகள் பற்றியும் எடுத்துக் கூறிய திரு. கந்தசாமி, கூடியளவு மருந்துப்பாவனைகளையும் பசளைகளையும் குறைத்து, இயற்கைப்பசளைகளை பாவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

சுன்னாகம் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. மா. இராமலிங்கம் கருத்துரை வழங்குகையில்; வீட்டுத் தோட்டச் செய்கையில் நாம் கூடிய கவனம் செலுத்த வேண்டும். வெங்காயம், மிளகாய் போன்ற பயிர்களின் செய்கையைக் குறைத்து குரக்கன், சாமை, பயறு போன்ற சிறு தானியச் செய்கையில் ஈடுபட்டு, எமது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய முயலவேண்டும் என்றுர்.

திரு. அ. தம்பித்துரை நன்றி கூறினர். (இ-90)

## காப்புறுதிப் பணம் நஷ்டஈட்டுடன்

யாழ்ப்பாணம், ஜூலை 10

உரும்பராயில் சமநலச் சேவை நிலையத்தின் கீழ் நெற்பயிர்களைக் காப்புறுதி செய்த விவசாயிகளுக்கு காப்புறுதிப் பணம் நஷ்டஈட்டுடன் வழங்கப்பட உள்ளது

இத்தகவலை பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. இ. யோகராசா தெரிவித்தார்.

கோப்பாய் தெற்கு, கோப்பாய் வடக்கு, நீர்வேலி, இருபாலை ஆகிய பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் பிரிவுகள் உரும்பராய் சமநலச் சேவை நிலையத்தின் கீழ் வருகின்றன. (இ-எ)


# பிரயாண ஒழுங்கு

HORIZON ENTERPRISES

★ குவைத் ★ சவூதி
★ டுபாய் ★ மாலைதீவு

ஆகிய நாடுகளுக்கான வேலைவாய்ப்புடன் செல்ல விரும்புவோர் எம்மிடம் லேபரர், கிளீனர் முதல் நிர்வாகப் பொறுப்பாளர் வரை அனைத்து வேலை வாய்ப்புடனும் மிக அதிகளவிலான வெற்றிடங்கள் உள்ளமையால் உடன்தொடர்பு கொள்ளவும்.

ஏற்கனவே வெளிநாட்டில் டிறைவிங் வேலை செய்தவர்களுக்கு குவைத் நாட்டிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

எமது முகவர் நிலையத்தினுல் சென்ற வாரமும் இவ்வாரமும் பயணம் மேற் கொண்டோர் பெயர் விபரம்:

1. குமாரசாமி தில்லைநாதன், இல 21 சுப்பிரமணியம் வீதி, அரியாலை.
2. ஜோர்ஜ் சோசப் வைரவர் கோவிலடி, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.
3. தங்கமயில் பத்மநாதன், வண்ணன்குளம், முல்லைத்தீவு.
4. கந்தையா சின்னத்தம்பி, புலோலி தெற்கு, புலோலி.
5. கனகராஜா திருஞானவதி, சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
6. சோமசுந்தரம் சோமாதேவி, கூழாவடி கிழக்கு ஒழுங்கை, ஆனைக்கோட்டை.
7. சின்னவன் அகிலேசன் குமாரசாமி, தாவளை இயற்றாலை, வரணி.
8. இராஜேந்திரம் யோகநாதன், பனிப்புலம் சுழிபுரம்.
9. பாவிலு அன்ரன் யேசுராசா, நல்லையன் வீதி, இளவாலை
10. எட்வின் பெரேரா வின்சன் பெரேரா, பாடசாலை ஒழுங்கை, வண் வட மேற்கு, ஆனைக்கோட்டை.
11. பிலிப்றிச்சாட் மாதகல் மேற்கு, மாதகல்.
12. வைத்திலிங்கம் சுப்பிரமணியம் இல. 37. E.Y.S மிருசுவில்.
13. கனகசபை மகேந்திரன், வேலணை சென்ரர் கிளினிக் வேலணை.
14. வேலாயுதம் ரகுநாதன், 8ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
15. வேலுப்பிள்ளை உதயகுமார், நெடுங்குளம் ரோட், கொழும்புத்துறை.
16. சுப்பையா மகேந்திரன், ஏழாலை மேற்கு, ஏழாலை.
17. இராமசாமி நந்தகுமாரன், கொல்லங்கலட்டி, தெல்லிப்பளை.
18. நல்லமுத்து ஜோசப் தருமலிங்கம், ஊரெழு மேற்கு, சுன்னாகம்.
19. சின்னத்தம்பி தெய்வேந்திரம், கட்டுவன் மேற்கு, தெல்லிப்பளை.
20. சுப்பிரமணியம் ஆனந்தன், யாழ் வீதி, வசாவிளான்.
21. பாலசிங்கம் ஸ்ரீ பாஸ்கரன், ஏழாலை மேற்கு, ஏழாலை.
22. நல்லையா கிருஷ்ணகுமார், மானிப்பாய் வடகிழக்கு, மானிப்பாய்.
23. தொம்மை அன்ரன் ஜெனராசன், பெரிய விளான், இளவாலை.
24. காசிலிங்கம் ஜெகநாதன், ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.
25. பரமசாமி பிரேமஸ்ரீ 114/1 கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

★ அடுத்த வாரம் பயணம் மேற்கொள்வோர் பெயர் விபரங்கள் தொடர்ந்தும் எம்மால் வெளியிடப்படும்.

முக்கிய குறிப்பு:

தற்போதைய நாட்டு நிலைமை, போக்குவரத்து சீர்கேடு காரணமாய் சாவகச்சேரி, வடமராட்சி, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களிலும் அவ்வப்பகுதி மக்களின் வசதி கருதி எமது பெயரைக் கொண்ட கிளைக்காரியாலயங்கள் அடுத்த வாரம் திறக்கப்படவுள்ளதென்பதையும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேம். மற்றும் எம்மிடம் கடவுச்சீட்டு. எல்லாநாட்டிற்கான சகல விதமான முத்திரைகளும் மலிவு விலையில் கிடைக்கும். உங்கள் கடவுச்சீட்டு (PASS FORT) குறித்த தவணையிற் செய்து தரப்படும்.

★ கடிதமூலம் தொடர்புகொள்ள விரும்புவோர் முத்திரையுடன்கூடிய மேல் விலாசமிடப்பட்ட கடித உறையுடன் தொடர்புகொள்ளவும்.

A. பத்மதாஸ்
இல. 97/1, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

தேவைகளைக் குறைத்துக் கொண்டு, திருப்தியாகவும் சந்தோஷமாகவும் வாழ்க்கையை நடத்துங்கள்.

— சுவாமி சிவானந்தர்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
10.07.1987 த.பெ.இல: – 23

# ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து...!

கல்லூரி அதிபர் காலஞ்சென்ற சிவராசாவின் இறுதி அஞ்சலி வைபவத்தில் இடம் பெற்ற இரங்கல் உரைகள், கல்விமான்களின் மனக்கொதிப்பைப் பிரதிபலிக்கின்றன.

தமிழ்க் குடிமக்களுக்குப் பாதுகாப்பு எதுவும் இல்லாமல், அவர்கள் அரசாங்கத்தினால் கொலை செய்யப்படுவதைத் தொடராமல் தடுக்க வேண்டும் என்ற உத்வேகம் அவர்களின் மன எழுச்சியாக உள்ளதை அவதானிக்க முடிகிறது.

வீமன்காமம் மகாவித்தியாலய அதிபர் திரு சிவராசா கடமையின் நிமித்தம் பாடசாலைக்கெனச் சென்றவர். இராணுவ அதிகாரிகளின் முன் அனுமதியுடன் சென்றவர். வெள்ளைக்கொடி கட்டிக்கொண்டு சென்ற போதிலும் சுடப்பட்டார்.

எனவே இச்சம்பவத்தைக் கல்விமான் ஒருவரை வேண்டுமென்று திட்டமிட்டு, ஒழித்துக் கட்டிய ஒரு சம்பவமாகவே எடுத்துக் கொள்ள வேண்டும்.

மாணவர்கள் கண்டபடி கைது செய்யப் படுகிறார்கள். அதன் மூலம் வருங்காலத் தமிழ் சமுதாயத்தின் கல்வி திட்டமிட்டுப் பாழடிக்கப்படுகிறது.

பாடசாலைகள் இராணுவ முகாம்களாக மாற்றப்படுகின்றன. கல்வி எனும் கலைத் தய்வம் குடிகொண்ட அந்த ஆலயங்கள் இப்போது காடைத்தனத்தின் உற்பத்தி நிலையங்களாக மாறி உள்ளன. பாடசாலைகள் மீது குண்டுகள் வீசப்படுகின்றன. அந்த அடாவடித்தனமும் தமிழரின் கல்வியைத் திட்டமிட்டுப் பாழடிக்கும் சதியின் ஓர் அம்சமே!

மன்னார் பரப்பங்கண்டலில் பாடசாலையில் இருந்த அதிபர், ஆசிரியர்கள் நாய்களைப் போல இழுத்துச் சுடப்பட்டது இலகுவில் மறக்கக் கூடியது அல்ல. அதன் பின்னர் ஆசிரியர்கள் சிலர் இராணுவத் துப்பாக்கிகளுக்குப் பலியானதும் உண்டு.

மொத்தத்தில் இவையாவும் தமிழர்களின் கல்வியைப் பாழடிக்கத் திட்டமிடப்பட்ட சதியின் வெவ்வேறு அம்சங்கள். மாணவரைக் கடித்து, கல்வி நிலையங்களைக் கடித்துக் கல்விமான்களையும் கடிக்கத் தொடங்கி விட்டார்கள் இப்போது!

கல்விமான்களில் கை வைத்தவர்கள் ஏனைய புத்திஜீவிகளிலும் கை வைக்கமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? தமிழ் இன ஒழிப்புத் திட்டத்தில் அதற்கும் முக்கிய இடம் கொடுத்திருக்கவே செய்வர்!

எனவே கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் கொல்லப்படுவதை சாதாரண இராணுவக் கொலைகளாகக் கருத முடியாது. இன ஒழிப்பின் பின்னரும் தப்பிப் பிழைக்கக் கூடிய தமிழ் மக்களை, கல்வி அறிவற்றவர்களாக்கி தமக்கு அடிமை குடிமையாக வைத்திருக்க விரும்பும் சிங்களப் பேரினவாதத்தின் மிக ஆழமான சதித்திட்டத்தின் ஆரம்பமே இவ்வாறான கொலைகளாகும்.

இன்று கல்விமான்கள். நாளை ஏனைய புத்தி ஜீவிகள் (டாக்டர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், எழுத்தாளர்கள், வழக்கறிஞர்கள் போன்ற தொழில் வல்லுநர்கள் (Professionals) மீதும் சிங்களப் பேரினவாதம் தனது இராணுவத்தின் மூலம் கைவைக்கத் தொடங்கலாம்.

தமிழ் மக்கள் எல்லோரும் எதிரிகள் அல்லர் என்று கூறிக்கொண்டே தமிழ்க் கல்விமான்களை ஒழித்துக்கட்டும் பணியில் தர்மிஷ்ட அரசு ஈடுபடத் தொடங்கி உள்ளது. இது ஏனைய புத்திஜீவிப் புலங்களுக்குப் பரவுவதற்கு முன்னர் அது தடுக்கப்பட்டாக வேண்டும். இவற்றைத் தடுக்க முடியாத கையாலாகாத நிலையில் தமிழினம் தத்தளிக்கிறது என்பது உண்மைதான்.

எனினும் சகல புத்திஜீவிகளும் தமது ஆட்சேபத்தையும் எதிர்ப்பையும் ஒரே குரலில் ஒலிக்க வேண்டும்.

தமிழ் இன ஒழிப்பின் ஒரு கட்டமாக கல்விமான்கள், புத்திஜீவிகள் அழிப்பும் ஆரம்பமாகி இருக்கிறது என்பதைச் சர்வதேச மட்டத்தில் பிரசித்தப்படுத்தலாம்.

ஆனால் அது இங்கு நடக்கிறதா? இந்தக் கஷ்டத்திற்குள் கிடந்து ஏன் நாம் உழல வேண்டும். அக்கரைப் பச்சைகளை நாடுவோம் என்ற போக்கில் பலரும் பறக்கிறார்கள். அதனை இனியாவது நிறுத்தக் கூடாதா?

அரசாங்கம் செய்யும், அரச படைகள் செய்யும் அநியாயங்களை தாங்கள் சுமந்து நிற்கும் பதவிகள் மூலம் அம்பலப்படுத்தத் துணிய வேண்டும். அரசின் மாதச் சம்பளத்தை மனதில் வைத்தால் அப்படிச் செய்யும் துணிவு வருவது மிகக் கஷ்டம் தான்!

வெள்ளம் கழுத்து மட்டத்துக்கு வந்து விட்டது. அது தலைக்கு மேல் ஏறிவிட்டாலோ, சாண் என்ன முழம் என்ன என்ற நிலையாகி விடும்.

எனவே புத்திஜீவிகளும், தொழில் வல்லுநர்களும் ஆபத்தை உணர்ந்து ஆக்க பூர்வமாக நடந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்வார்கள் என நம்புகிறோம். வருங்காலம் வாழ அது மிகவும் இன்றியமையாதது.

# வன்செயல் பாதையிலிருந்து விலகிச் செல்லுங்கள்

## படுகொலைகளை அடுத்து ராஜீவ் அவசர வேண்டுகோள்

புதுடில்லி, ஜூலை 9

வன்செயல் பாதையில் இருந்து விலகிச் செல்லுங்கள்.

—இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி இளைஞர்களுக்கு அவசர வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

இரண்டுசம்பவங்களில் சீக்கியத் தீவிரவாதிகள் 70க்கு மேற்பட்ட இந்துக்களைப் படுகொலை செய்ததைத் தொடர்ந்து வடஇந்தியாவில் நிலவும் பதற்ற நிலையைத் தணிக்க இந்திய அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

நாடாளுமன்ற அரசியல் விவாதக்குழு பிரதமர் தலைமையில் கூடி நிலைமையைப் பரிசீலனை செய்தது.

பின்னர் எதிர்க்கட்சித் தலைவர்களை அழைத்து பிரதமர் காந்தி பேசினார்

அதனைத் தொடர்ந்து கூட்டறிக்கை ஒன்று விடப்பட்டது.

அக் கூட்டறிக்கையில், ஆத்திரப்படாது நாட்டின் ஒற்றுமையைப் பேணும் நடவடிக்கைகளை மக்கள் எடுக்க வேண்டும் என்று கோரப் பட்டுள்ளது.

இதனிடையில் ஆத்திரம் கொண்ட இந்துக்கள் புதுடில்லியில் பிரதமர் காந்தி, உள்துறை அமைச்சர் பூட்டாசிங் ஆகியோரின் இல்லங்களுக்கு முன்னாள் ஆர்ப்பாட்டம் நடத்த முயன்றனர். பொலீஸார் குண்டாந்தடிப் பிரயோகம், கண்ணீர்க் குண்டு வீச்சு நடத்தி கூட்டத்தைக் கலைத்தனர்.

சீக்கியர்கள் மீதும் இந்துக்கள் தாக்குதல் நடத்தினர். இதில் 6 சீக்கியர்கள் உயிரிழந்தனர்.

இதனிடையில் வியாழன் புதுடில்லியில் பந்த் அனுஷ்டிக்கப்பட்டது. ஹரியானாவில் அனைத்துக் கட்சிகளின் கூட்டம் ஒன்றை முதல்வர் தேவிலால் அழைத்திருந்தார்.

வட இந்திய மாநிலங்களில் பல இரவு நேர பஸ்சேவைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. பகல் பஸ் சேவைகளும் பொலீஸ்பாதுகாப்புடன் நடத்தப்படுகின்றன. (இ–எ)

## விடுவிக்க சோவியத் இணக்கம்

சட்டவிரோதமாக மாஸ்கோவில் கிரெம்ளின் மாளிகைக்கு அருகில் விமானத்தில் சென்று இறங்கிய மேற்கு ஜெர்மன் இளைஞர் மத்தியாஸ் றாஸ்ட் என்பவரை விடுவிக்க சோவியத்யூனியன் இணங்கி இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

தற்போது மேற்கு ஜெர்மன் அதிபர் சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்திருக்கின்றார்.

சோவியத் தலைவர்களுடன் இவர் பேச்சுக்கள் நடத்தியிருக்கின்றார். (இ–எ)

## நிக்கரகுவா கிளர்ச்சியாளர்களுக்கு உதவிய இரு அதிகாரிகள்

வாஷிங்டன், ஜூலை 9

ஈரானுக்கு ஆயுதங்கள் விற்றதால் கிடைத்த லாபத்தை நிக்கரகுவா அரசுக்கு எதிரான கிளர்ச்சியாளருக்கு வழங்கும் வேலைகளில் நேரடியாக ஈடுபட்ட இரண்டு அதிகாரிகளின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அமெரிக்க காங்கிரஸ் குழு நடத்தும் விசாரணையில் கேர்ணல் ஒலிவர் நோர்த் இத்தகவலை வெளியிட்டார்.

ஈரான் விவகாரம் வெளியானதைத் தொடர்ந்து பதவி விலகிய பாதுகாப்பு அதிகாரி பொயின்ட் டெக்ஸ்டர் சி.ஐ.ஏ. தலைவராக இருந்த வில்லியம் கேஸி ஆகியோரே அந்த அதிகாரிகள் என்று கேர்ணல் ஒலிவர் நோர்த் தெரிவித்தார்.

சி.ஐ.ஏ. தலைவராகப் பணியாற்றி வந்த வில்லியம் கேஸி மூளைக்கட்டி நோய் காரணமாக மரணமானார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ–எ)

## வெளி உலகில்

### பெரஸ் முபாரக்

ஜெனீவா, ஜூலை 9

பலஸ்தீனப் பிரச்சினை குறித்து சர்வதேச மாநாடு ஒன்றை நடத்தும் முயற்சி சம்பந்தமாக இஸ்ரேல் வெளிநாட்டமைச்சர் ஷிமோன் பெரஸும் எகிப்திய ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்கும் ஜெனீவாவில் பேச்சுக்கள் நடத்த இருக்கின்றனர். (இ–எ)

## ஈரானின் பிரதான எண்ணெய்க் குதம் மீது ஏவுகணைத் தாக்குதல்

பக்தாத், ஜூலை 9

ஈரானின் முக்கிய எண்ணெய்க்குதம் ஒன்றை ஏவுகணையால் தாக்கி விட்டதாக ஈராக் கோரியிருக்கின்றது.

கார்க்தீவில் இந்த எண்ணெய்க் குதம் உண்டு.

ஈராக்கின் போர்விமானங்கள், ஏவுகணைகள் மூலம் இத்தாக்குதலை நடத்தியதாகவும் எண்ணெய்க் குதம் எரிந்து கொண்டு இருப்பதாகவும் ஈராக் அறிவித்தது.

இதனிடையில் அமெரிக்கக் கொடியுடன் செல்லும் குவைத் எண்ணெய்க் சப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கும் அமெரிக்கத் திட்டம் தடையின்றி செயல்படுத்தப்படும் என்று வெள்ளை மாளிகை அறிவித்திருக்கின்றது.

அதேநேரத்தில் அமெரிக்க யுத்த விமானங்கள் குவைத் எண்ணெய்க் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கும்ஆகாயக் கண்காணிப்பு ரோந்துகளை ஆரம்பித்துவிட்டன என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. (இ–எ)

## மார்க்கோஸுக்கு அமெ. கட்டுப்பாடு

மணிலா, ஜூலை 9

அமெரிக்காவை விட்டு வெளியேற பிலிப்பீன்ஸின் முன்னாள் ஜனாதிபதி பெர்டினன்ட் மார்க்கோஸுக்கு அமெரிக்கா கட்டுப்பாடு விதித்துள்ளது.

பிலிப்பீன்ஸுக்கு மீண்டும் செல்ல திரு. மார்க்கோஸ் திட்டமிட்டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கையை அமெரிக்கா எடுத்திருக்கின்றது.

அமெரிக்கா விதித்திருக்கின்ற பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக, திரு. மார்க்கோஸ் ஒரு சிறைக்கைதி போன்றே அமெரிக்காவில் இருக்க வேண்டி இருக்கும் என்று அமெரிக்க வட்டாரங்கள் தெரிவித்தன

அமெரிக்காவில் ஹொனலுலு தீவில் திரு. மார்க்கோஸ் வசித்து வருகின்றார்.

பிலிப்பீன்ஸுக்குத் திரும்பிச் சென்று திருமதி அக்யூனோ ஆட்சியைப் பலவீனப்படுத்தும் நடவடிக்கையில் திரு. மார்க்கோஸ் ஈடுபடுவதைத் தடுக்கும் முயற்சியாக அமெரிக்கா இந்த நடவடிக்கையை எடுத்திருக்கின்றது. (இ–எ)

## விக்ஷரம்

என்ன முரளியார்! நீயும் இப்ப பெரிய பகிடி எல்லாம் விடப்பழகி விட்டாய் போலை கிடக்கு!! கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போற கதை எல்லாம் சொல்லுறாய்!

அச்சாணியார் யாழ். குடாநாட்டை மிகவிரைவிலை தங்கடை கட்டுப் பாட்டுக்குள்ளை கொண்டு வந்து விடுவார் எண்டு சொல்லுறார்.

அரசியல் தீர்வில தான் தங்களுக்கு நம்பிக்கை எண்டு சொல்லிச் சொல்லி, மேலும் மேலும் படையைப்பலப் படுத்திறதாகவும் சொல்லுறார்.

இப்ப இரண்டொரு நாளாய், இந்திய விமானம் வாறதுக்கு முன்னம் ஓடித்திரிஞ்சமாதிரி, வானத்திலை வாகனங்கள் அடிக்கடி ஓடுதுகள். நகரத்திலை ஷெல் அடியும் கூடியிருக்குது!

இஞ்சை நிக்கிற இந்திய செஞ்சிலுவைக்காறரையும் ஏதாவது சொல்லி அனுப்பி விடப் பாக்கினம்.

இதுகள் எல்லாத்தையும் கூட்டிக் கழிச்சுப் பாத்தால் திரும்பவும் ஒரு "ஒப்பறேஷன் லிபறேஷன்" செய்யிற யோசினைபோலைஇருக்கு. இந்திய நிவாரணப் பொருள்கள் இனிப்போதும், நாலாவது கப்பலோடை நிறுத்தலாம் எண்டெல்லாம் பீடிகை போடுறதும் அதுக்குத்தான் போலை.

இந்தியக் கப்பல்கள் யாழ்ப்பாணத்துக்குத் தொடர்ந்து வந்தால்அப் பகுதியையே இந்தியா விட்டை ஒப்படைச்ச மாதிரிப் போய்விடும் எண்டு சொல்லிப் போட்டு கொந்தராத்துக்காரர் அன் கோ பிரிட்டனுக்குப் பறந்து விட்டார்.

அவர் சிலவேளையளிலை சில விஷயங்களைச் சரியாய் பிடிச்சுக் கொள்ளுவார். கொழும்பு முனிசிப்பல் வேட்பாளர் விஷயத்திலையும் மல்லிமாராய்ச்சியின் மகளைப் பிடிச்ச பிடியாய்ப் பிடிச்சுக் கொண்டார் பாக்கயில்லையே.

அரசாங்கத்திலை இரண்டு மூண்டு குழுக்கள் இருக்கெண்டு நான் முந்திச் சொன்னது ஞாபகம் இருக்கும் எண்டு நினைக்கிறன். கொந்தராத்துக்காரறை வலது கை மல்லிமாராய்ச்சி எண்டது தெரியாதே?

★ ★ ★

பேப்பர் பாத்திருப்பாய். வட இந்தியாவிலை பெரிய கொந்தளிப்பான சூழ்நிலை ஏற்பட்டிருக்கு. 24 மணி நேரத்திலை மூண்டு வன்செயல்கள்; 72 பேர் கொலை எண்ட அளவுக்கு நிலைமை மோசமடைஞ்சிட்டுது.

ராஜீவுக்கு பெரிய தலையிடியைக் குடுக்கிறதுக்கு பாகிஸ்தான்தான் உதுகளைத் தூண்டி விடுகுது எண்டது சொல்லாமலே தெரிஞ்ச விஷயம்.

பாகிஸ்தானும் ஸ்ரீலங்காவும் கொஞ்சக் காலமாய் ஆத்ம நண்பர்கள் எல்லே! ஸ்ரீ லங்கா, தமிழ்ப் பகுதியளிலை "ஒப்பறேஷன்" நடத்திறவேளை இந்தியாவை உள்நாட்டு விஷயத்திலை மூழ்கிப்போய் இருக்கச் செய்தால் இஞ்சாலைப் பக்கம் அதிகம் கவனம் திரும்பாது எண்டு பாகிஸ்தானும், ஸ்ரீலங்காவும் கணக்குப் போட்டிச்சினமோ ஆருக்குத் தெரியும்?

★ ★ ★

வடஇந்தியக் குழப்பங்களைக் கண்டு காஞ்சிப் பெரியவரும் கலங்கி இருக்கிறார். இரண்டு வருஷமாய் இந்தியா முழுவதையும் சுத்தி வந்தவர். நாட்டிலை சமாதான சக வாழ்வை உண்டாக்க ஆத்மீக தேசிய இயக்கம் ஒண்டை உரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சமய சந்திகளில்

### பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜூலை 10

கந்தரோடை ஓட்டன் கட்டு ஞானவைரவர் ஆலய வருடாந்த பொங்கல் விழா இன்று வழமை போல நடைபெறுகிறது.

பகல் வைரவப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று இரவு பொங்கல் நடைபெறும். (இ)

### விசேஷ உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை10

பௌர்ணமி தினமான இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு திருநெல்வேலி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள ஸ்ரீ நாகபூஷணி அம்பாளுக்கு விசேஷ ஆராதனைகள் நடைபெறும்.

தொடர்ந்து பகல் அம்பாளின் திருவீதியுலாக் காட்சி இடம்பெறும். பிற்பகல் நான்கு மணியளவில் ஸ்ரீ சக்கரபூஜை நிகழும். (இ)

# அமுதசுரபியைத் தன்னகத்தே கொண்ட நயினை நாகபூஷணி ஆலயம்

## கந்தபுராண காலத்துக்கு முந்தியது

பண்டைக் காலத்தில் யாழ்ப்பாணமும் சத்ததீவுகளும் ஓர் இராச்சியமாக இருந்தன. இவற்றை விண்ணும் மண்ணும் என்று அழைத்தார்கள். இதன் அரசன் இந்திரன்.

யாழ்ப்பாணத்தில் பொன்னாலையும் (பொன்னகர்) நயினாதீவில் இமையம் எனப்பட்ட ஒரு நகரமும் இந்திரனின் வாசமாயிருந்தன. சிவனுக்கு நயினாதீவில் ஒரு கயிலாசமும், மாந்தையில் இன்னோர் கைலாசமும் இருந்தன.

பண்டைக் காலத்தில் நயினாதீவு ஒரு பெரிய கடல் வியாபாரச் சந்தையாயிருந்தது. சீனா, வங்காளம், தமிழகம், எகிப்து முதலிய தேசங்களில் சரக்குகள் பாக்கு நீரிணைத் துறைகளிற் பண்டமாற்றுச் செய்யப் பட்டது. இதனை பெறிப்பிளஸ் என்ற நூலில் இருந்தும் பிளினியின் இயற்கைச் சரித்திரத்தில் இருந்தும் அறிய முடிகிறது. மணிமேகலா தெய்வம் நயினாதீவின் காவற் தெய்வம் நாகம்மாள், நாகதம்பிரன் என்ற பெயர்களாலும் இத் தெய்வம் இன்றழைக்கப் படுகின்றது. நயினாதீவுக் கோயிலில் வணங்கப்படுவது நாகபாம்பு என்பர் உண்மையை ஆராயாதார்.

### அமுதசுரபி

கோவலன் மடந்தை
குணதவம் புரிந்தோ
னுவலந் தீவிற் றுனனி
மிக்கோ
ளங்கையி னேந்திய
அமுதசுரபியொடு
தங்காதிப்பதித் தரும
வனத்தே
வந்து தோன்றின(ள்)—
ஈங்கிப்பாத்திர
மென்கைப் புகுந்தது
நாவலொடு பெயரிய
மாபெருந்தீவத்து
என்ற அடிகள் நோக்கற்பாலது.

பாக்கு நீரிணையில் இருக்கும் சத்ததீவுகளே கந்தபுராணம் சுட்டும் ஏழு தீவுகள். இத் தீவுகளின் புராணப் பெயர் சம்பு, சாகம், குசை, கிரவுஞ்சம், இலவு, சிகாமேதகம், புட்கரம் தற்காலப் பெயர் ஊர்காவற்றுறை, காரைதீவு, எழுவைதீவு, அனலைதீவு, நெடுந்தீவு, புங்குடுதீவு, நயினாதீவு.

இமையத்துக்குச் சமீபத்தில் நயினாதீவில் இருந்த ஒரு பொய்கை சரவணம். குமரனின் விளையாட்டிடங்கள் கயிலாசமும் (திருக்கேதீஸ்வரமும்) அதன் அயலும்.

நாகர் என்பது நாகம் சுவர்க்கம் என்னும் பதத்தில் இருந்து வந்தது. நாகம்—பாம்பு என்னும் பதத்தில் இருந்து அல்ல.

இந்த இராச்சியப் பாதுகாப்புக்காக நயினாதீவில் மேருக்கோட்டையும், ஊர்காவற்றுறையில் ஒரு காவலும் இருந்தன. கோட்டைகளில் எட்டுத் திக்கிலும் ஒவ்வொரு சேனாதிபதியின் படையிருந்தது.

இவ்வெண்மருள் இந்திரன் தலைவன். ஏனைய ஆறு சேனாதிபதிகளும் நயினாதீவை யொழிந்த ஏனைய ஆறு தீவுகளின் சிற்றரசர் போலும்.

இலங்கையிலும் எண்மரின் தலங்கள் இருந்தன. ஊர்காவற்றுறைக் கடற்காவல் விஷ்ணுவின் பொறுப்பில் இருந்தது.

மேருக்கோட்டையில் பிரமா, விஷ்ணு, சிவன் வசித்த இடங்களுமிருந்தன. பிரமாவின் வாசய் வேறிருந்ததில்லை. விஷ்ணு ஊர்காவற்றுறைக் காவலிலும் வசித்தார். சிவனுக்கு நயினாதீவில் ஒரு கையிலாசமும் மாந்தையில் இன்னோர் கையிலாசமும் இருந்தன.

இவற்றினால் நயினைக் கோயிலும், மணிமேகலாத் தெய்வமும், அமுதசுரபியும் மணிமேகலைக் காப்பியக் காலத்துக்கும் பௌத்த காலத்துக்கும் கந்தபுராண காலத்துக்கும் மிக மிகப் புராதனமானது என்பது துணிபாகும்.

(டானியல் ஜோன் எழுதிய கந்தபுராண மறை பொருள் என்ற நூலில் இருந்து தொகுக்கப்பட்டது. தகவல். க. வே பரமலிங்கம்) ★

## கொடித்தினம்

யாழ்ப்பாணம், ஜூலை10

மன்னார் துயர் துடைப்பு மறு வாழ்வுச் சங்கத்தினர் இம் மாதம் 15 ஆம் திகதியை கொடி தினமாக அனுஷ்டிக்க உள்ளனர்.

சேகரிக்கப்படும் நிதி விதவைகளின் புனர் வாழ்விற்கும், பாதிக்கப் பட்ட பாடசாலை மாணவ மாணவிகளின் கல்விக்கும் செலவிடப் படும்.

கொடிதினத்தில் பொதுமக்களிடம் சங்கத்தினர் நிதி சேகரிப்பார்.

(இ–எ)



## பொய்யாமொழி

**குறள்:**

சிறைநலனும் சீரும் இலரெனினும் மாந்தர்
உறைநிலத்தோடு ஒட்டல் அரிது.

**பொருள்:**

அறிவும் தன்மையும் மக்கள் சிறப்பும் இல்லாதவராயினும் பகைவர் வாழுகின்ற இடத்திற்குச் சென்று அவரோடு ஒன்றாகுதல் அரிது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனையாகின்றன
மயூரதி வெளியீடுகள்
1979 முதல் கணிதம் 9-10 பாடமும், பயிற்சியும் என்னும் நூலின் ஆசிரியர்களான அம்பிகைபாகன் - சச்சிதானந்தன் - ஜெயபாலன் ஆகியவர்களுள் முக்கிய பங்காற்றியவரும் தற்போது இலங்கையிலுள்ள ஒரேயொருவருமான ஆசிரியரின் ஆக்கங்கள்தான் மயூரதி வெளியீடுகளாகும்.

# உதயன்

10-07-1987 வெள்ளிக்கிழமை

விற்பனையாகின்றன
மயூரதி வெளியீடுகள்
1986 புதிய பாடத்திட்டத்திற்கமைய
1) ஆண்டு 7 கணிதம் - பாடமும் பயிற்சியும்
2) ஆண்டு 8 கணிதம் - பல்தேர்வு வினாக்கள்
3) ஆண்டு 10 கணிதம் - பல்தேர்வுவினாக்கள் மாணவர் தாமாகவே மீட்டலை நிகழ்த்த உதவும் நூல்களாகும்.

## 29 முகாம்களுக்கான இந்திய நிவாரண உதவி விநியோகம் ஆரம்பம்

சாவகச்சேரி, ஜூலை 10
வடமராட்சி, வலிகிழக்குப் பகுதிகளில் இருந்து சாவகச்சேரித் தொகுதிக்கு இடம்பெயர்ந்த 29 முகாம்களில் உள்ள அகதிகளுக்கு இந்திய நிவாரண உதவிப் பொருள்களின் விநியோகம் திங்கட்கிழமை கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அன்று மாலை டிறிபேக் கல்லூரியிலும் செவ்வாய்க்கிழமை சரசாலை சரஸ்வதி வித்தியாசாலையிலும்வைத்துப் பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த திரு. ஏ. யோன்ஸ் இவற்றை வழங்கினார்.

உதவி அரசாங்க அதிபர் திரு. பி. சுந்தரம்பிள்ளை, பிரசைகள் குழுவைச் சேர்ந்த திரு எஸ்- கந்தசாமி, கிராமசேவகர்கள் இக்குழுவில் இடம் பெற்றனர்.

மொத்தம் 2462 குடும்பங்களுக்கு உணவுப் பொருள்களின் விநியோகம் தொடர்ந்து இருவார காலம் இடம்பெறும் என உதவி அரசாங்க அதிபர் நம்பிக்கை தெரிவித்தார்.
(இ-74-31)

## திருமலை நகரசபைக்கு ஐ.தே க. வேட்பாளர்கள் போட்டியின்றி தெரிவு

திருகோணமலை, ஜூலை 10
திருகோணமலை நகரசபையில் ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளர்கள் போட்டியின்றித் தெரிவு செய்ய பட்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் ஒரு தமிழர் கூட இடம்பெறவில்லை.

இரண்டு முஸ்லிம்கள் பட்டியலில் இடம்பெறுகின்றனர். ஏனையோர் சிங்களவர்கள்.

பட்டியலில் உள்ள பெயர்கள் வருமாறு:- 1. சி. விஜயசிறி 2. டபிள்யு. விஜயசிறி 3. ஆர். எம். விமலசிறி, 4. ஏ. ரி. சிறிசேன 5. திருமதி டபிள்யு. ஜி. எம். எம். ஆரியவதி 6. அப்துல் ரஸீக் 7. எம். பி. அசனார் லெப்பை, 8. எச். டபிள்யு. பண்டித் சிங்கோ 9. பி. எச். சிறிபால 10. எச். கே. வில்சன் ஜெயசிங்க, 11, எம். உபநந்த 12. கே. பி. பேபி சிங்கோ 13. கே. ஜி. பத்மதிலக 14. பி. ஆர். பி. சோமரத்தின. 15. பி. தம்மானந்த (இ-எ-150)

## முகாம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
தாகவே முடிவு செய்தேன்.

அரைமணி நேரம் கழித்து நான் அடைபட்டுக் கிடந்த மலசலகூட கட்டடத்திற்கு அருகே தமிழில் கதைத்துக் கேட்டது.

நான் உள்ளேயிருந்து சத்தமிட்டேன்.

அதன் பிறகு கதவுப் பூட்டு உடைக்கும் சத்தம் கேட்டது. நான் கைகளை உயர்த்தியவாறு வெளியே வந்தேன்.

புலிகள் வந்து என்னை விடுவித்ததை அப்போது தான் உணர்ந்தேன்.

புலிகளின் உதவியுடன் உடனடியாக அவ்விடத்திலிருந்து தப்பி வந்தேன்.

என்னுடன் கைதான மற்றைய இருவருக்கும் என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

— இப்படி அவர் கூறினார். (உ-160)

இடம்மாற்ற அறிவித்தல்
குகன் ஸ்ரோர்ஸ்
எமது ஸ்தாபனம்
இன்று (10 - 07 - 1987) வெள்ளிக்கிழமை முதல்
இல. 259, மின்சார நிலைய வீதிக்கு
இடம் மாற்றப்பட்டுள்ளது
என்பதை வாடிக்கையாளர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
குகன் ஸ்ரோர்ஸ்
259, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். (1273)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 10 07-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Friday July 10, 1987 Registered as a Newspaper at the General Post Office under number QJ/94/N/87

## ஆந்திர ரயில் விபத்து: 50 பேர் உயிரிழப்பு

ஹைதராபாத், ஜூலை 9
ஆந்திர மாநிலத்தில் மஞ்சேரி என்னும் இடத்தில் ஏற்பட்ட ரயில் விபத்தில் நீரில் மூழ்கிய பெட்டிகளில் இருந்து 50 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன.

வியாழக்கிழமை அதிகாலை இக்கோர விபத்து ஹைதராபாத்தில் இருந்து சுமார் 200 மைல் தொலைவில் இடம்பெற்றது.

ஹைதராபாத் நிசாமுதீன் எக்ஸ்பிரஸ் ரயிலே விபத்துக்குள்ளானது. வெள்ளம் காரணமாக ரயில்பாதை அடித்துச் செல்லப்பட்டிருந்தது. அந்த இடத்தை ரயில் அண்மித்ததும் தடம் புரண்டது.

பிரதமர் ராஜீவ் காந்தி இச்சம்பவம் குறித்து துயரம் வெளியிட்டிருக்கின்றார்.

ரயில்வே அமைச்சர் மாதவராங் சிந்தியா சம்பவம் நடந்த இடத்துக்கு விரைந்து சென்றார். (இ-எ)

## மண்டைதீவிலிருந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம் ஜூலை 10
குருநகர் கடற்கரைப் பகுதியில் இருக்கும் மீன்பிடி இலாகாக் கந்தோருக்கு வாகனமொன்று செல்வதைக் கண்ட சிப்பாய்கள் மண்டைதீவு 'மினி' முகாமில் இருந்து குருநகர் கரையோரத்தை நோக்கி ஷெல் தாக்குதலை நடத்தினர்.

புதன்கிழமை முற்பகல் 11 மணி அளவில் இச்சம்பவம் நடந்தது.

மீன்பிடி இலாகாக் கந்தோர், பனிக்கட்டி ஆலை, சிநோர் வலைத் தொழிற்சாலை, மத்திய மேற்கு வீதிகளில் வீழ்ந்து வெடித்த ஷெல்களால் மேற்குறிப்பிட்ட இடங்களில் சேதங்கள் ஏற்பட்டன.

## பல்கலைக்கழகங்கள்: அறிக்கை சமர்ப்பிக்க நாடாளுமன்ற தெரிவுக்குழு

கொழும்பு, ஜூலை 10
பல்கலைக்கழகங்களின் செயல்பாடுகள், குறைபாடுகள்பற்றி விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க நாடாளுமன்ற தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கின்றது.

நாடாளுமன்றத்தில் இது சம்பந்தமான தீர்மானம் நேற்று நிறைவேற்றப்பட்டது.

கல்வி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பேசுகையில்; கல்வியுடன் அரசியலை இணைக்கக்கூடாது என்று கேட்டுக் கொண்டார்.

மஹரகம எம். பி. திரு. தினேஷ் குணவர்த்தன பேசுகையில்; "தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சகல பல்கலைக்கழக மாணவரும் நிபந்தனை இன்றி விடுதலை செய்யப்படவேண்டும்"- என்று விண்ணப்பித்தார்.

"பல்கலைக்கழகங்களில் குழப்பம் ஏற்படுத்தும் முயற்சியில் தீயசக்திகள் ஈடுபட்டுள்ளன. நாடாளுமன்றக் குழுவின் விசாரணையில் இது வெளிப்படுத்தப்படும்"- இப்படி பிரதி கல்வி அமைச்சர் சமரவீர வீரவன்னி தெரிவித்தார்.

சிறு குழுக்களின் நாசகார வேலையால் பெரும்பான்மை பல்கலைக்கழக மாணவர் கஷ்டப்படுகின்றனர் என்று பிரதி உயர் கல்வி அமைச்சர் திரு. ஏ. ஆர். எம். பி. அத்தநாயக்கா தெரிவித்தார். (இ-எ)

## தேர்தல் பகிஷ்கரிப்பு:

## 6 கட்சிகள் கூட்டணி இணைப்புக்குழு நியமித்தது

கொழும்பு, ஜூலை 10
உள்ளூராட்சித் தேர்தல்களைப் பகிஷ்கரிக்கும் செயல்திட்டம் ஒன்றைத் தயாரிக்க இணைப்புக்குழு ஒன்றை ஆறு கட்சிகளின் கூட்டணி நியமித்துள்ளது.

இத்தகவலை கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் கே. பி. சில்வா தெரிவித்தார்.

ஆறு கட்சிகளில் இருந்தும் தலா இரண்டு பிரதிநிதிகள் வீதம் இந்த இணைப்புக்குழுவில் அங்கம் வகிப்பர்.

குழுவின் முதலாவது கூட்டம் புதன்கிழமை நடைபெறுவதாக இருந்தது. இக் கூட்டம் பெரும்பாலும் நாளை சனிக்கிழமை நடைபெறக் கூடும்-

இப்படி திரு. கே. பி. சில்வா மேலும் சொன்னார். (இ-எ)

## ஈரானை பிரான்ஸ் எச்சரிக்கிறது

பாரிஸ், ஜூலை 9
ஈரானுடனான ராஜதந்திர உறவுகள் முறித்துக்கொள்ளப்படும் என்று பிரெஞ்சுப் பிரதமர் ஜேக் கிருப் எச்சரித்திருக்கின்றார்.

## சித்தாரம்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)
வாக்கப்போறதாகச் சொல்லி இருக்கிறார். இஞ்சை எங்கடை மஞ்சள் குருவியள் மாதிரி அரசியல்மீது மதம் ஆதிபத்தியம் செலுத்தாமல் இருந்தால் சரிதான்!

★ ★ ★

இப்பத்தையச்சூழ்நிலையிலை இரத்ததானம் மிக அவசியமான ஒண்டு. தானத்திலை சிறந்தது அன்னதானம் எண்டு சொன்னாலும் அதிலும் சிறந்தது இரத்ததானம் தானப்பா!

உனக்குத் தெரியுமே! இரத்ததானம் செய்தவை ஒரு சர்வதேச சங்கத்தையே உண்டாக்கி இருக்கினம்! அந்தச் சங்க மாநாடு இந்தோனேஷியாவிலை இந்தக் கிழமைத் தொடக்கத்திலை நடந்தது. அந்த நாட்டு ஜனாதிபதி மாநாட்டைத்தொடக்கி வைச்சார். 1980 இல் தங்கடை நாட்டிலை 28,000 பேர் தான் இரத்ததானம் செய்தவை எண்டும், இப்ப அவையின்ரை எண்ணிக்கை ஐஞ்சு லட்சமாய் உயர்ந்திருக்கெண்டும் அவர் பெருமையோடை சொன்னார்! அப்பிடி ஒரு நிலைமை இஞ்சை வருமா...?

## வெள்ளி தோறும் உண்ணாவிரதம்

திருகோணமலை, ஜூலை 10
திருகோணமலை மாவட்டத்தில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்களின் விடுதலையைக் கோரி வெள்ளிக்கிழமை தோறும் அவர்களின் உறவினர்களான பெண்கள் உண்ணாவிரத இயக்கம் ஒன்றை நடத்தி வருகின்றனர்.

திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் இவர்கள் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். (இ-எ-150)

## விசாரணை பகிரங்கமாக நடைபெறும்

கொழும்பு, ஜூலை 10
மே தினம் அன்று பொலீஸாரினால் சுட்டுக் கொல்லப்பட்ட பல்கலைக்கழக மாணவனின் மரண விசாரணை மேல் நீதிமன்றத்தில் பகிரங்கமாக நடத்தப்படவேண்டும்.

இப்படி அப்பீல் நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டது.

உயிரிழந்த மாணவனை கித்சிறிமேவன் ரணவாக்காவின் தந்தை செய்த மனுவை விசாரித்த பின்னர் அப்பீல் நீதிமன்றத்தின் இரண்டு நீதியரசர்கள் முன்சண்ட உத்தரவைப் பிறப்பித்தனர்.

முதலில் இது பற்றிய விசாரணையை மேல் நீதிமன்றத்தில் இரகசியமாக நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. (இ-எ)

## கோணேஸ்வர ஆலயத்தில் நித்திய பூசைகள்

திருகோணமலை, ஜூலை 10
திருகோணமலை கோணேஸ்வர ஆலயத்தில் மீண்டும் நித்திய பூசைகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த ஆண்டு நிகழ்ந்த அனர்த்தங்களினால் பூசைகள் நிறுத்தப்பட்டிருந்தன.

சென்ற 3 ஆம் திகதி பதினெரு பரிவாரமூர்த்திகளுக்கும் பிரதிஷ்டா அபிஷேகம் செய்துவைக்கப்பட்டது.

பெருந்திரளான சைவ மக்கள் இதில் கலந்து கொண்டனர்.

திருகோணமலை இராணுவ இணைப்பதிகாரி கேர்ணல்செனவிரத்தின, அரச அதிபர் ஏ. ரி. ஆரியரத்தின ஆகியோரும்கலந்துகொண்டனர். (இ-எ-150)

## போராளிகளின்.....

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)
ருக்கின்றனர்.

ஆவரங்கால் சிவன் கோவிலில் ஏராளமான மக்கள் தங்கியுள்ளனர். அதைவிட தென்மராட்சிக்கும் பல குடும்பங்கள் குறுக்குப் பாதைகளால் சென்றுள்ளன. வேறு இடங்களுக்கும் பலகுடும்பங்கள் சென்றுள்ளன.

வடமராட்சியில் இராணுவ முகாம்கள் அமைந்துள்ள பகுதிகளைத் தவிர ஏனைய பகுதிகளை போராளிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துகொண்டிருக்கிறார்கள்.

மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் உயிரை வெறுத்துப் போராடி வருகின்றனர்.

அவர்கள் மக்களுக்கு உதவுவதுடன் அவர்கள் பாதுகாப்பாக வேறிடங்களுக்கு செல்லவும் உதவி வருகிறார்கள்.

வடமராட்சியில் இராணுவ நடமாட்டம் வெகுவாகக்குறைந்துவிட்டது. முகாம்களில் இருந்தே தாக்குதல் நடக்கிறது. அப்பகுதியில் இந்திய நிவாரணப் பொருள்கள் ஒருபகுதி மக்களுக்கே கிடைத்தன. பின்னர் அது தடைப்பட்டுள்ளதால் ஏனைய மக்களுக்கு கிடைக்கவில்லை.

நெல்லியடியிலிருந்து அநேகமாக எல்லா மக்களும் வெளியேறிவிட்டனர்.

உடைமைகள் யாவற்றையும் விட்டு உடுத்த உடுப்புடன் புறப்பட்டு கால்நடையாக வந்து சேர்ந்த இம் மக்கள் மாற்று உடுப்பு இன்றி அவதியுறுகின்றனர்.

தமது வீடுகள் உடைமைகளுக்கு என்ன நடந்ததோ என அவர்கள் அஞ்சுகின்றனர். (இ-68)

## 50 மணித்தியாலம் நீரில் தொடர்ந்து மிதந்து சாதனை நிகழ்த்த முயற்சி

சென்னை, ஜூலை 9
50 மணித்தியாலங்கள் நீரில் தொடர்ந்து மிதந்து சாதனை ஒன்றை நிலைநாட்டுவதில் தமிழ்நாடு பொலீஸைச் சேர்ந்த தலைமைக் கான்ஸ்டபிள் ஆர். சண்முகம் ஈடுபட்டிருக்கின்றார்.

ஆள் அளவு ஆழமான நீரின்மேல் 50 மணித்தியாலங்கள் ஆடாமல் அசையாமல் மிதந்து சாதனை புரிந்து கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறுவதே இவரின் இலட்சியம்.

நேற்றுக் காலை 9-45 மணிக்கு இவரின் சாதனை முயற்சியை சென்னையில் உள்ள நீச்சல் தடாகம் ஒன்றில் தமிழ்நாடு பொலீஸ் ஆணையாளர் ஸ்ரீபால் ஆரம்பித்து வைத்தார்.

ஏற்கனவே இவர் நீச்சல் தடாகத்தில் 81 மணித்தியாலங்கள் தொடர்ந்து நீச்சல் அடித்து சாதனை புரிந்து கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-எ)

## பயங்கரவாதத்துக்கு முடிவுகட்டும் வரை பேச்சுவார்த்தை இல்லை

--- ராஜீவ்

பயங்கரவாதத்துக்கு முடிவுகட்டும் வரை பஞ்சாப் பிரச்சினை பற்றி பேச்சுக்கள் நடத்தப்படமாட்டா.

பிரதமர் ராஜீவ்காந்தி மேற்கண்டவாறு அறிவித்தார்.

சீக்கியத் தீவிரவாதிகளின் வன்செயல்கள் அதிகரித்து வரும் நேரத்தில் பிரதமர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

சமயத்தை அடிப்படையாக வைத்து வன்செயல்களில் ஈடுபடுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

பயங்கரவாதத்தை அரசாங்கத்தினால் மட்டுமே ஒழித்துவிட முடியாது.

பொதுமக்களின் ஒத்துழைப்பும் இதற்குத் தேவை.

இப்படி பிரதமர் தெரிவித்தார். (இ-எ)

## பௌத்தபிக்கு தலைவராம்

கொழும்பு, ஜூலை 10
கொழும்பு நகரில் கார்களைத் திருடுவதாகச் சந்தேகப்படும் கோஷ்டி ஒன்றின் தலைவர் ஒரு பௌத்த பிக்கு.

இப்படி பொலீஸார் கருதுகின்றனர்.

களவு போன கார் ஒன்றை பிக்கு ஒருவர் ஓட்டிச் சென்றபோது பொலீஸாரிடம் அண்மையில் அகப்பட்டுக் கொண்டார்.

அப்போது பிக்குவின் கையில் விளையாட்டுத் துப்பாக்கி ஒன்றும் இருந்தது. (இ-எ)

## செஞ்சிலுவை பிரதிநிதிகள் வந்தனர்

யாழ்ப்பாணம், ஜூலை 10
ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த மூன்று பிரதிநிதிகள் நேற்று காங்கேசன்துறைக்கு வந்து சேர்ந்தனர்.

ஏற்கனவே யாழ்ப்பாணம் வந்து கொழும்பு திரும்பிய திரு. சினனுடன் ஜனுப் முகைதீன், ஜனுப். மரைக்கார் ஆகியோரே காங்கேசன் வந்துசேர்ந்தனர். (உ-10)

# வடமராட்சியிலிருந்து 700 குடும்பங்கள் வரை சாவகச்சேரி வந்தன

சாவகச்சேரி, ஜூலை 10
நெல்லியடி, கரவெட்டி, சரணவாய், உடுப்பிட்டி, துன்னாலை பகுதிகளைச் சேர்ந்த சுமார் எழுநூறு குடும்பங்கள் சாவகச்சேரி வந்து சேர்ந்துள்ளன. நெல்லியடி இராணுவ முகாம் தாக்குதலின் பின்னர் இங்கு இவர்கள் வந்துள்ளனர்.

நிறைமாதக் கர்ப்பிணிப் பெண்கள், வயோதிபப் பெண்கள் கூட கால்நடையாக சரசாலை, வரணிப் பகுதியை வந்தடைந்தனர்.

பத்துப் பதினைந்து நாள் சிசுக்களுடன் கூட தாய்மார் உயிரைப் பிடித்துக்கொண்டு வந்தனர்.

லயன், லியோ கழகங்களும், தென்மராட்சி ஒன்றியமும் வேண்டிய உதவிகளை அளிப்பதில் ஈடுபட்டு வருகின்றன. (இ-31)

## செஞ்சிலுவைச் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 10
யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தின் அவசரப் பொதுக்கூட்டம் ஒன்று திங்கட்கிழமை ஹோட்டல் ஞானம்ஸில் நடைபெறவுள்ளது.

சகல செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்களையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு செயலாளர் திரு. வ. பரமசிவம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ-10)

## மீண்டும் பதவியேற்பதற்கு

## வின்சன்ட் மறுத்தால் கூரே எம். பியாவார்

கொழும்பு, ஜூலை 10
கொழும்பு வடக்கு எம். பி. பதவியை மீண்டும் ஏற்க திரு. வின்சன்ட் பெரேரா மறுத்தால், அந்த இடத்துக்கு கொழும்பு மேயர் சிறிசேன கூரேயை நியமிக்க ஐ. தே. க. தலைமைப் பீடம் முடிவு செய்துள்ளதாம்.

ஆனால் திரு. கூரேயோ, "நாடாளுமன்றம் போவது என்றால் கொழும்பு மத்திய தொகுதியில் இருந்து தான் போவது என்பதே எனது நிலைப்பாடு"- என்று தெரிவித்திருக்கின்றார்.

திரு. வின்சன்ட் பெரேராவின் இராஜினாமாக் கடிதம் ஏற்றுக் கொள்ளப் பட்டுவிட்டது இதனால் கொழும்பு வடக்கு எம். பி. பதவி காலியாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## இந்திய - - -

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)
எம். பி.க்களில் பலரும் கருத்திற்கொண்டுள்ளனர்.

அரசாங்க நாடாளுமன்றக் குழுவில் இக்கருத்துக்கள் முன்வைக்கப்பட்டபோதிலும் உயர்மட்டம் அக்கருத்தை உதாசீனம் செய்து நடந்துகொள்வது சம்பந்தப்பட்டவர்களுக்குப் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளதாம்.

இதனால் அவர்கள் அரசாங்கத்திற்குள் பூகம்பம் ஒன்றை தோற்றுவிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

உயர்மட்டத்துக்குச் சார்பான அமைச்சர்களும், எம். பி.க்களும் இதுவிடயத்தில் ஏற்கனவே ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளதால் நினைத்த மாதிரி காரியங்களைச் செய்வது புத்திசாலித்தனமல்ல என்று கருதி கருத்து மோதலைச் சமாளிக்க முயன்று வருவதாகவும் அறியவருகிறது. (அ-உ)

## கம்பன் விழா

நல்லூரில் இம்மாத நடுப்பகுதியில் கம்பன் விழா ஒன்றினை நடத்துவதற்கு அகில இலங்கைக் கம்பன் கழகம் முடிவு செய்திருக்கிறது.

சமகால சமூக, வாழ்க்கைப் பிரச்சினைகளைப் பிரதிபலிக்கும் விதத்தில் இந்த விழாவின் நிகழ்ச்சிகள் அமையும் என கழகத்தின் அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் தெரிவித்தார். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org